# திருநாமப்

## பதிகம்.



சென்னை திருவொற்றியூர் கலைமகள் பதிப்பு

விலை] 1939 [பை 6

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# நித்தியாநு சந்தானம்

ஸ்ரீஶைலேஶ தாயபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம், யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்ய ஜாமா தரம்முநிம். லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமு நவத்யமாம், அஸ்மதாசாரி பர்யந் தரம் வந்தே குரு பரம்பராம்.

யோநித்ய மச்யுத பதாம்புஜ யுக்மருக்ம
வ்யாமோஹதஸ்த்தி தராணித்ருணாய மேனே
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே
மாதாபிதாயுவத யஸ்தநயா விபூதிஸ்
ஸர்வம்யதேவ நியமே தமதந்வயாநாம்
ஆக்யஸ்ய ந குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீ மத்தங்க்ரியுகளம் ப்ரணமாமிமூர்த்நா,
பூதம்ஸரஸ்ய மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீ பக்திஸார குலசேகர யோகிவாஹான்
பக்தாங்ரி ரேணுபரகால யதீந்த்ரமிச்ரான்
ஸ்ரீமத்பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மி நித்தம்

## தனியன்

குருமுக மநநீத்யப்ராஹவே தாந்சேஷான்
நரபதி பரிக்லுப்தம் கமாதா துகாம்
ஸ்வசுரம்மா வந்தயம் ரங்கநா தஸ்யசரக்ஷா
த்விஜகுலதிலகந்தம் விஷ்ணு சித்தம்நமாமி

## நேரிசை வெண்பா

மின்னார் தடமதில்சூழ் வில்லிபுத்தூரென்றொ
ருகாள், சொன்னார் கழற்கமலஞ் சூடினோம்
முன்னாள், கிழியறுத்தா னென்றுரைத்தோம்
கீழ்மையினிச்சேறும், வழியறுத்தோம் நெஞ்
சமே வந்து பாண்டியன் கொண்டாடபட்ட
பிரான் வந்தானென், றீண்டியசங்க மெடுத்
தூத வேண்டிய, வேதங்களோதி விரைந்து
கிழியறுத்தான், பதாங்கள் யாமுடைய பற்று.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீராமஜெயம்

# திருநாமப் பதிகம்.

## பன்னிரு சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

ஆதிபரஞ்சோதியா யண்டபகிரண்ட மாய நாதியாக நின்றநாமம் அடிமுடியினடுவாகி யெளியவன் களிகூரவன்பு வைத்திருந்த நாமம் நீதிநெறியாகவே மணிபூரகந் தனி ணிலையாக நின்றநாமம் நேசமுடனே கருட வாகண பீடேறியே நின்று விளையாடுநாமம் வீதிவெளிகயாகவே யுச்சிமலைமீதினில் விளக் கொளி யினின்றநாமம் மேலாம்பதத்தையு நாலாம் பதத்தையும் விளங்கக்கொடுக்குநாமம் நாதாந்த பேரெளியதாகவே விளங்கிடு நமோ நமோ வென்றநாமம் நராராயண ஹரிகோவிந் தாவென்று தினநாடிவரு திருநாமமே.

அரிநமோ வென்றுரைப் போர்க்குமே பாண்டவர்க்கருளாகி நின்றநாமம் அருச்சு னற்காகவே கதிரினைமறைத்து நல்லரசுநிலை வைத்தநாமம் பரிவான கிருஷ்ணவதாரத்திற் பூதகிபருத்த முலையுண்டநாமம் பாரினில் கல் லினைமித்துப் பெண்ணாகவே பண்பருள்

புரிந்தநாமம் திருமேவுபிரகலா தன்றனக்காக நரசிங்கமுகமான நாமம் தேவாதி தேவரை யிடுக்கண் வைத்தோர்களைத் திறைகொண்டி ருந்தநாமம் கருவாகி யுருவாகி திருவாகி மரு வாகிக் காட்சிதந்திட்ட நாமம் கரியீசபிரகாச திருநேச பரவாசகருணை தருதிருநாமமே

முன்னுளிலேசிவன் றிருக்கையிற் பாண மாய் முப்புர மெரித்தநாமம் முதலைவாய்ச் சிக்கிய மததரிக்கந்நாளின் மூலமாய் நின்ற நாமம் பொன்னுன ருக்மணிதேவி கலியாணத் திற் போராய்த்துலைத்த நாமம் பூதப்பிசாசு பில்லி சூனிய முதல்யாவுமே பொய்யாக்கி விட்ட நாமம் சின்ன பின்னங்களாய் இராவ ணன் சிரசினை திடமுடன ரிந்தநாமம் சிரஞ் சீவியாகவே விபீஷணன் றனக்குமே ஜெயப் பட்டமீந்த நாமம் கன்னிவயதாகவே கருணை சமுரத்தித்திற்கு காட்சிதருளுநாமம் கரியீசபி ரகாசதிருநேசபரவாச கருணைதரு திருநாமமே.

எண்ணிரண்டாயிர யிடையர்தம் மாதருக் கிறையாயிருந்த நாமம் இகலோக பரலோக சொர்க்கலோகமு முதலேகயால் நின்றநாமம்

மண்ணுக்கும் விண்ணுக்கும் மொன்ருன மாவலியை வன்சிறையில் வைந்தநாமம் மரா மரம் மொருகணையி லுருவவே தொட்டன்று வாலியை வதைத்த நாமம் ஒன்றிற்குமைந் திக்கு உண்மையதுவேயாக வுந்தியிலுதித்த நாமம் ஓம்நமோ நாராயண பரந்தாமாவென வோதவே நின்றநாமம் கண்ணுக்கு நாசிக்கு நடுவாகவே நின்ற காட்சியே தந்தநாமம் கரி யீச பிரகாச திருநேசபரவாச கருணைதரு திரு நாமமே.

சிலைதனைவளைத்தபின் ஜனகன் மகளான சீதையை மணந்தநாமம் திருவரங்கேசனுய்க் காவேரிவாசராய்த் திருச்சனனமான நாமம் கலையினையுரிந்திட்டபாண்டவர்கள் மனைவிக்கு கருணைதந்திட்ட நாமம் காலிகடிரண்டிடக் கானகந்தன்னிலே காவலாய் நின்றநாமம் மலையினைச் சுமந்தன்று கோக்களின் மேளா மல் வருணனைத் தடுத்தநாமம் மாரீசன்பின்னே திரித்து மிருகூராகமானையே யெய்த நாமம் நிலையாத சூரனைவாரகவ வதாரமாய் நின்றன்று கொன்ற நாமம் நீலமேகத்தை நிகர்காயாம்பூ

வண்ணனெனு நெடியவன்றிரு நாமமே.

சாலோக சாமீப சாரூபகமாகவே சாயுச்சிய மான நாமம் சகலகலைவேதப் புராணங்களுக் கெல்லாம் தயாபரமதான நாமம் பூலோக புவ லோக பாதாள மீதிலே புண்ணியமளித்த நாமம் புவனமது தன்னிலே நாலாறதென் னவே புராணகலையான நாமம் ஆலோல மாகவே யண்டங்ளாயிரத் தெட்டாயளந்த நாமம் அங்குளோரிங்குளோராகவே யாவற்கு மறிவிக்க வந்தநாமம் பரலோகமாகவே பன் னக சயனத்திற் பள்ளிக்கொண்டிட்ட நாமம் பரவாசகுருவீச திருநேசபிரகாச பகவனது திருநாமமே.

சுழியான முனையிலே சூட்சாதிசூட்சமாய் சொல்லியே நின்றநாமம். சொல்காவியக்குப காரமாகவேசொல்விக்கவந்தநாமம் வேளியான வெளியிலேமேலானவீட்டிலேமீதங்கிருதநாமம் வித்தாரமாகமே யுத்தாரமாகவே வித்தாரமான நாமம் ஒழியாத தேகமெடுத்தாலு முன் செய லுதவியாய் நின்றநாமம் உள்ளூற்ற சோதி யாய் வெள்ளூற்ற காதலாய் யுள்ளத்திநின்ற

நாமம் அழியாத பதவியை யீந்தெனையெந் நாளு மடிமைகொண்டிட்ட நாமம் ஹரிநமோ நாராயணு வென்றுரைப்பவர்க் கரியபெருதிரு நாமமே.

தாஹுத்தன் பாதமுஞ் சேத்துமம் வருகாலைத் தற்காத்தருள் செய்தநாமம் சந்திரன் செல வாழ்வு தொலையாதபாக்கியஞ் சார்ந்துரட்சிக்கு நாமம் தேனத்தமாகவே திருநாமபோதந் தெரி சிக்கவந்த நாமம் திருவவதாரமாய்த் தாசானு தாசனாய் செகதலம்பரவு நாமம் ஆனத்த மாகவே ஓங்காரவடிவமாய் யுள்ளுருகிநின்ற நாமம் உல்லாசமாகவே மூவகைத் தோத்திரமு முயிராகிநின்ற நாமம் ஆனந்தமாகவே யணு வுக்கு மணுவாகி யசைவற்றிருந்த நாமம் ஹரிநமோ நாராயணு வென்றுரைப்பவர்க் கரியபெரு திருநாமமே.

செய்யாதப் பாவங்கள் செய்தாலு நீக் கிடுஞ் ஸ்ரீராமவென்ற நாமம் தீராதவல்பிணி கள் மாருத துன்பங்கதீர்த்து ரட்சிக்கு நாமம் பொய்யான காமப்பெருங்கடல் வீழ்த்தாது புன்பிறவி தீர்க்குநாமம் புண்டரீ காக்ஷனைக்

கண்டு சேவிக்கவே பின்முறுவல் செய்யுநாமம் மெய்யான கிருபைதரு வைகுந்தவாழ்வினை வீருயளிக்கு நாமம் மெய்ஞ்ஞான வழிதந்த யஞ்ஞானம் நீக்கியே மேன்மைதனை யீயுநாமம் ஓயாமலேதினமு நம்பினேனென்றவரை நாடி ரட்சிக்கும் நாமம் நாராயணா ஹரிகோவிந்தா வென்று நாடிவரு திருநாமமே.

ஸ்ரீங்காரமாகவே நூற்றெட்டிருப்பதி சிறந் தோங்கிநின்ற நாமம் தினந்தினம் இராமா வென்றுரைப்பவர்கள் சிந்தையுட் சிறப்புற்றி ருக்கு நாமம் நீங்காமல் லெந்நாளு மதிகதிர் விளக்கமாய் நிரம்பியே நின்றநாமம் நிசநித் தியமானதொரு பரசத்திய வாசமாய் நிறைவுற் றிருந்தநாமம் பாங்கானபேருடன் வாங்கா மலே தினம் பண்பினைக்கொண்டா நாமம் பச்சை மயிலச்சுதானந்த கோவிந்தனெனப் பரவுதற்கரிய நாமம் ஆங்காரமாகவே திருநாம வயிலன்பு வைத்திருந்த நாமம் ஹரி நமோ நாராயணா வென்றுரைப்பவர்க் கரியபெருதிரு நாமமே

முற்றிற்று.

# நூதன புத்தக விளம்பரம்

32 பேஜ்

மாரியம்மன் தாலாட்டு
சிவசோதிமாலை
கதிர்காமமாலை
சுப்பிரமணியமாலை
சஷ்டிகவசம்
பாலதண்டபாணி விருத்தம்
பலசரக்கு எலப்பாட்டு
கலியாண வாழ்த்து
மூவர் அம்மானை
வாய்பாடு
அருணாசலஸ்வரர் பதிகம்
திருநீற்று பதிகம்
ஸ்ரீராம ஸ்தோத்திரம்
திருநாம பதிகம்
மாட்டுசந்தை பாட்டு

கந்தர் சஷ்டிகவசம்
கந்தர் அநுபூதி
இடும்பன் கவசம்
விநாயகர் கவசம்
கந்தர் அலங்காரம்
கந்தர் கலிவெண்பா
திருமுருகாற்றுப்படை
அஷ்டோத்திரம்
கணேசர்தியானம்
தத்துவக்கட்டளை
வராகிமாலை
பூஜாராமாயணம்
ஆனந்தராமதியாணம்
நவரத்தின திருபுகழ்

கலைமகள் விலாச புத்தகசாலை,
ஆண்டார் தெரு, திருவாரூர்.